6. அறிவிப்பு.

பேரவை அலுவல்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் இக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் பேரவையின் ஒப்புதலுடன் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

30–3–1992 திங்கட்கிழமை .. கோரிக்கை எண் 13— நீதி நிர்வாகம்.
கோரிக்கை எண் 14— சிறைச் சாலைகள்.

3–4–1992 வெள்ளிக்கிழமை .. கோரிக்கை எண் 24— தொழில்கள்.
கோரிக்கை எண் 54— தொழில்கள் குறித்தமூலதனச் செலவுகள்.

பேரவையின் இன்றைய முற்பகல் அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் பிற்பகல் 4,00 மணிக்கு பேரவை மீண்டும் கூடியது.

5, மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி,

(ஈ) கோரிக்கை எண், 11—மாவட்ட நிருவாகம்,
(உ) கோரிக்கை எண் 1 —நிலவரித்துறை,
(ஊ) கோரிக்கை எண் 4— பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்.

(எ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்— நிருவாகம்.

(ஏ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

(ஐ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு,